# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

***2019 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2019.05.27 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தம்)

***1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, ஸ்ரம வாசனா நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 17.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, ஸ்ரம வாசனா நிதியச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஸ்ரம வாசனா நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் உறுப்பாண்மையை அதிகரிப்பதற்குமாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது-

(அ) நிதியத்தின் ஊழியர்களின் தங்கிவாழுநர்களுக்கு நலம் பேணல் மற்றும் மருத்துவ வசதிகளை அளிப்பதன்மூலம் ; அத்துடன்

(ஆ) தொழில் முடிவுறுத்தல் விடயத்தில் அல்லது கைத்தொழில் பிணக்கு விடயத்தில் ஊழியர்களுக்கு சட்ட உதவியைப் பெறுவதற்கு நிதிசார் நிவாரணத்தை வழங்க இயலச் செய்வதன் மூலம்,

ஸ்ரம வாசனா நிதியத்தின் குறிக்கோள்களை விசாலிப்பதற்குமாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தேசிய லொத்தர் சபையின் தத்துவங்கள் மற்றும் பணிகளுக்கு குறித்த சில திருத்தங்களைச் செய்வதற்குமாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழ் தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்பட்ட லொத்தருக்கு ஏற்புடையற்பாலதான குறித்தசில ஏற்பாடுகளை கூட்டிணைப்பதற்குமாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தேசிய லொத்தர் சபையினால் விதிகளை ஆக்குவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையை எடுத்துக்கூறுவதற்குமாகும்.

***வாசகம் 7*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ''அமைச்சர்'' என்னும் சொல்லமைப்புக்கு புதிய வரைவிலக்கணமொன்றை உட்புகுத்துவதற்குமாகும்.

ச. வ.- ஓ. 42/2013

## 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, ஸ்ரம வாசனா நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, ஸ்ரம வாசனா நிதியம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, ஸ்ரம வாசனா நிதியச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- 1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(i) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

''(1) சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பெயர் குறிப்பிடுகின்ற பின்வரும் பதவி வழி உறுப்பினர்கள் -

(i) அமைச்சரின் அமைச்சுச்செயலாளர் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும். (இதனகத் துப்பின்னர் ''தவிசாளர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்);

(ii) தொழில் ஆணையாளர் தலைமையதிபதி;

(iii) தேசிய லொத்தர் சபையின் பொது முகாமையாளர்;

(ஆ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நிதி அமைச்சின் பிரதிநிதியொருவர்; மற்றும்

(இ) அமைச்சரினால் நியமிக்கப்படும் நான்கு ஆட்கள் (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்)

(2) அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(1அ) சபையின் பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் எந்தப் பதவியின் பயனைக்கொண்டு சபைக்கு நியமிக்கப் பட்டிருந்தாரோ அந்தப் பதவியை வகிக்கும்வரை சபையில் அப்பதவியை வகித்தல் வேண்டும்;" அத்துடன்

(3) அதன் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "மூன்று உறுப்பினர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து உறுப்பினர்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (அ) என்னும் பந்தியில், "ஊழியர்கள்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஊழியர்களும் அவர்களில் தங்கிவாழ்வோரும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அதன் (இ) என்னும் பந்தியில், "ஊழியர்கள்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "ஊழியர்களும் அவர்களில் தங்கிவாழ்வோரும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அதன் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(எ) (i) ஊழியரொருவரின் தொழிலை முடிவுறுத்தல் தொடர்பில் அல்லது கைத்தொழில் பிணக் கொன்று தொடர்பில் தொழில் ஆணையாளர் நாயகத்தின், தொழில் நியாயசபையொன்றின், நடுத்தீர்ப்பாளரொருவரின் அல்லது கைத் தொழில் நீதிமன்றமொன்றின் அல்லது ஏதேனும் நீதிமன்றமொன்றின் முன்னிலையில் தொடங்கப்பட்ட அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் முடிவுறாதுள்ள வழக்கு நடவடிக்கைகள் உள்ளவிடத்து, சட்ட உதவியைப் பெற்றுக் கொள்வதற்கென ஊழியர்களுக்கு நிதிசார் நிவாரணங்கள் வழங்குதல்;

(ii) இப்பந்தியின்கீழ் வழங்கப்பட்ட நிதிசார் நிவாரணங்கள் இச்சட்டத்தின்கீழ் அதுசார்பில் ஆக்கப்படுகின்ற விதிகளினால் சபை தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைக்கு அமைவானதாயிருத்தல் வேண்டும்;".

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை, நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுக:-

"(அ) ஒவ்வொரு லொத்தர் சீட்டின் முகப்பின்மீது "ஸ்ரம வாசனா என்ற சொல்லமைப்பைச் சேர்ப் பதுடன், தேசிய லொத்தர் சபையால் லொத்தர் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுசெய்தல்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன்மூலம்:-

"(ஐஅ) நிதியத்தின் நோக்கத்துக்கென நடாத்தப்படுகின்ற லொத்தர்களை ஊக்குவித்தலும் பிரசாரப்படுத்து தலும்; மற்றும்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது -

(1) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம்:-

"(2) அத்தகைய ஒவ்வொரு சீட்டிழுப்பும் ஒவ்வொரு லொத்தர் சீட்டின் முகப்பின்மீது "ஸ்ரம வாசனா" என்ற சொல்லமைப்பை சேர்ப்பிப்பைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் நிதியத்துக்கும் லொத்தர் சபைக்குமிடையிலான உடன்படிக்கையின்படி இணங்கப்பட்டவாறான அத்தகைய முறையில் நடாத்தப்படுதலும் வேண்டும்."; மற்றும்

(2) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம்:-

"2(அ) நிதியத்துக்கும் லொத்தர் சபைக்குமிடையிலான உடன்படிக்கையானது, மற்றவற்றுக்கிடையில், பின்வருவன தொடர்பிலான ஏற்பாடுகளை உள்ளடக்குதல் வேண்டும் -

(அ) அவ்வாறு நடாத்தப்பட்ட சீட்டிழுப்புக்களில் வழங்கப்படவுள்ள பரிசில்கள்;

(ஆ) அத்தகைய சீட்டிழுப்புக்களில் கோரிக்கை விடுக்கப்படாத பரிசில்கள் கையாளப்படவிருக்கின்றமுறை; மற்றும்

(இ) சீட்டிழுப்புக்களின் வரும்படிகளில் இருந்து நிதியத்துக்கு குறித்தொதுக்கப்படவுள்ள தொகை.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலம்.

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "அதன் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் புரிவதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதன் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளை அல்லது இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்படுகின்ற விதிகளுக்கான ஏதேனும் விடயம் ஆக்கப்படுவதைப் புரிவதை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) சபையினால் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, அதன் பிரசுரத் தேதியன்றோ அல்லது அதன்கண் குறித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்றோ நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் அதன் வெளியீட்டின் பின்னரான ஆறு மாதங்களுக்கு பிந்தாமல் அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்துக்கு முன்கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் விதி அதன்கீழ் செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்தான ஆனால் இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, "உள்ளூரதிகார சபை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது–

> ' "அமைச்சர்" என்பது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப் பட்டுள்ளதோ அந்த அமைச்சர் எனப் பொருள்படும்.'

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.